# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2010 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சிறிநிவெஸ் பிரஜாமித்ர சஹயோகிதா கேந்திரம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2010, பெப்புருவரி மாதம் 12 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

## 2010 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சிறிநிவெஸ் பிரஜாமித்ர சஹயோகிதா கேந்திரம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ. ஓ. கூட். 11/2008

## சிறிநிவெஸ் பிரஜாமித்ர சஹயோகிதா கேந்திரத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

சிறிநிவெஸ் பிரஜாமித்ர சஹயோகிதா கேந்திரம் என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கேந்திரமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்க சொல்லப்பட்ட கேந்திரத்துடன் தொடர்புடைய எல்லாக் கருமங்களையும் பயனுறுதியுடன் கொண்டுநடாத்தி நிறைவேற்றும் நோக்கத்திற்காக கம்பளை கொப்பேவலயில் ஸ்ரீ பிரியதர்ஷனராம புரான ரஜமஹா விஹாரஸ்தானயில் இதற்கு முன்னர் உருவாக்கப் பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட கேந்திரம் எந்தக் குறிக்கோள்க ளுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதற்கு முன்னர் வெற்றிகரமாக மேற்கொண்டும் நிறைவேற்றியும் வந்துள்ள தாதலாலும் அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித் துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்களின் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, சிறிநிவெஸ் பிரஜாமித்ர சஹயோகிதா கேந்திரம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*சிறிநிவெஸ் பிரஜாமித்ர சஹயோகிதா கேந்திரத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "கேந்திரம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சிறிநிவெஸ் பிரஜாமித்ர சஹயோகிதா கேந்திரத்தின் உறுப்பினர் களாக தற்போதுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப் படும் கூட்டுத்தாபனத்தின் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாப னம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களான அத்தனை ஆட்களும் அத்த

கையோரும் அத்தகைய எண்ணிக்கையினருமான ஆட்கள் "சிறிநிவெஸ் பிரஜாமித்ர சஹயோகிதா கேந்திரம்" என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப் பட்டதொரு குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன் இப்பெயர் கொண்டு அது வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதி ராக வழக்குத்தொடுக்கவும்படலாம், அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் எந்தப் பொதுக் குறிக்கோள்களுக்காக அமைத்துருவாக்கப்படுகின்றதோ அந்தப் பொதுக் குறிக்கோள் கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத் தப்படுகின்றது :$

(அ) இலங்கையினுள் வாழும் வறிய குடும்பங்களின் பொருளாதாரத் தரத்தை மேம்படுத்துதல் ;

(ஆ) இந்த வறிய குடும்பங்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் பேணுவதற்காகவும் அரசாங்க செயற்பாடுகளுடன் ஒத்திசைதல் ;

(இ) வறுமையை ஒழிப்பதற்கும் வறியவர்களின் நிதி நிலையை மேம்படுத்துவதற்குமான செயற்பாடுகளுக்கு உதவுதலும் ஆதரவளித்தலும் ;

(ஈ) சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பேணிக்காத்தல் சார்ந்த செயற்பாடுகளில் ஆதரவளித்தல் ;

(உ) சமூக செயலூக்கக் கருத்திட்டங்கள் ஊடாக சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்தின் மட்டங்களை மேம்படுத்து தலும் சமூக நலம்பேணல் செயற்பாடுகளுக்கு உதவி யளித்தலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக் கோள்களையுடைய இலங்கையில் அல்லது வெளிநாட்டி லுள்ள வேறு ஏதேனும் நிறுவனத்துடன் அல்லது

ஒழுங்கமைப்புடன் ஒருங்கிணைந்து அவற்றுடன் கருத்துக்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் பரிமாறுதல் ; அத்துடன்

(எ) குறைந்த வருமானமுள்ள, உதவி தேவைப்படும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கு புத்தகங்கள், உபகரணங்கள், ஆடைகள், கடன்கள் மற்றும் வேறு நிதியுதவி வழங்குதலில் உதவிபுரிதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமாகின்றவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எத்தன்மையதுமான எல்லாச் செயல்களையும், கருமங்களையும், விடயங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். அத்தத்துவங்களுள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், தொழிற்படுத்துதல், முடிவுறுத்துதல், பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணத்தைக் கடனெடுத்தல் அல்லது திரட்டுதல், மானியங்களையும் நன்கொடைகளையும் பெறுதல் அல்லது திரட்டுதல் அதன் நிதிகளை முதலீடு செய்தல், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்திற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் ஈடுபடுத்துதல், தொழிலுக்கமர்த்துதல், வேலைநீக்கம் செய்தல் என்பவற்றிற்கான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கும் போஷகர், நிறைவேற்றுப் பணிப்பாளர், தலைவர், நிர்வாகச் செயலாளர், பொருளாளர் அத்துடன் அத்தகைய விதிகளுக்கமைய தேர்ந்தெடுக்கப்பட்ட பத்தொன்பது உறுப்பினர்களுக்குக் குறையாதவர்களும் இருபத்து மூன்று உறுப்பினர்களை விஞ்சாதவர்களும் அடங்கிய குழு உறுப்பினர்களையும் கொண்ட முகாமைக் குழுவொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று பதவிவகிக்கும் கேந்திரத்தின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

நிறைவேற்றுப் பணிப்பாளர்.

**6.** (1) கம்பளை, கொப்பேவெலயிலுள்ள ஸ்ரீ பிரிய தர்ஷனாராம புரான ரஜ மஹா விஹாரஸ்தானயின் விஹாராதிபதி கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுகவீனம் காரணமாக அல்லது வேறு ஏதுவினால் நிறைவேற்றுப் பணிப்பாளர் என்ற வகையில் அவரது கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராக இருக்குமிடத்து அவர் அத்தகைய சமூகமின்மையின்போது அத்தகைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஸ்ரீ பிரியதர்ஷனராம புரான ரஜமஹா விஹாரஸ்தானயின் அதி சிரேஷ்ட பிக்குவைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(3) கேந்திரயின் ஆயுள் போஷகராகவும் நிறைவேற்றுப் பணிப்பாளராகவுமிருந்த ஸ்ரீ பிரியதர்ஷனராம புரான ரஜமஹா விஹாரஸ்தானயின் விஹாராதிபதியான வண. கொப்பேவல சிறிநிவச நாஹிமி கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுப் பணிப்பாளராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**7.** (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமூகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குகளைக் கொண்டு பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களை வகுப்பாக்கம் செய்தல், சேர்த்துக் கொள்ளல், அவர்கள் விலகுதல், பதவிதுறத்தல், அவர்களை நீக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தெரிவுசெய்தல், பதவி தாங்குநர்கள் பதவி விலகுதல், அவர்களைப் பதவியிலிருந்து நீக்குதல் அல்லது அவர்களின் பதவியை வறிதாக்குதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள் மற்றும் பணிகள் கடமைகள் ;

(இ) முகாமைச் சபையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் மற்றும் அவர்களுடைய தத்துவங்கள், பணிகள், கடமைகள் அத்துடன் முகாமைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களினதும் முகவர்களினதும், சேவையாளர்களினதும் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் பணிகளும் ;

(உ) முகாமைச்சபையின் கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும் தொடர்பான கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் நிதியின் கட்டுக்காப்பும், அதன் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி அதே போன்ற கூட்டமொன்றிலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**8**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை–

(அ) நிறைவேற்றுப் பணிப்பாளரினதும் தலைவர் பிக்குவினதும் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) முகாமைக் குழுவின் வலுவளிப்பின்றியும் முகாமைக் குழுவின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையன்றி

யும் சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கும் அடையாளமாக ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**9.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருப்பவரும் கணக்காய்வாளர் ஒருவராகத் தொழில் புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருப்பவருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) எந்தக் கணக்காளர் கழகத்தின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக இருப்பதுடன் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவருமாக உள்ளாரோ அந்தக் கணக்காளர் கழகம்,

என்று பொருள்படும்.

**10.** கூட்டுத்தாபனம், கொள்வனவு, கொடை, நன்கொடை, குத்தகை, மரணசாதன கையளிப்பு என்ற வகையில் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும் சட்டத்தில் இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய எல்லா ஆதனமும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்க உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**11.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் நோக்கத்திற்கு அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்கு அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு வருமதியாகக்கூடியதைத் தவிர வேறு உதவுதொகை எதனையும் செலுத்துவதற்கு ஆளாதாலாகாது.

*உறுப்பினர்களின் பொறுப்பின் வரையறை.*

**12.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கொடைகள், மரணசாதனக் கையளிப்புகள், உறுதிமாற்றங்கள், நன்கொடைகள் அல்லது உதவுதொகைகள் என்ற வகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் பேரவையால் தீர்மானிக்கப்படக்கூடிய வங்கியொன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பலிடப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியங்கள்.*

(2) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவின் உரிமைகளையேனும் பாதித்தலாகாது.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்